இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 24-09-2025

# வெளியுறவுக் கொள்கையின் தோல்வி!

**அமெரிக்காவில் இருந்து வரும் செய்திகள் அனைத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வெளியுறவுக் கொள்கை தோற்று வருவதையே உணர்த்துகின்றன.**

**வாரம்தோறும் ஏதாவது ஒரு வெளிநாட்டில்தான் இந்தியப் பிரதமர் மோடி இருக்கிறார். உள்நாட்டைத்தான் கவனிக்கவில்லை, வெளிநாடுகளில் ஆவது இந்தியப் பெருமையை நிலைநாட்டுவார் என்று நம்பினோம். ஆனால் அதிலும் மண்தான் விழுந்துள்ளது.**

அதிலும் குறிப்பாக அமெரிக்க அதிபர் டிரம்ப், நமது பிரதமர் மோடியின் நட்பானது மிகக் கெட்டியானதாக இருந்தது. இவர் வெற்றிக்கு அவரும், அவர் வெற்றிக்கு இவரும் உழைத்தார்கள். உருகினார்கள். பிணைந்தார்கள். இருவருமே ஒருவர்தான் என்று காட்டிக் கொண்டார்கள். இறுதியாகப் பார்த்தால், இந்தியாவின் மீது எல்லாவகையிலும் தாக்குதல் நடத்துவதை தனது ஹாபியாக மாற்றிக் கொண்டு விட்டார் அமெரிக்க அதிபர் டிரம்ப்.

முதலில் இந்தியாவுக்கு வரிச்சுமையை அதிகப்படுத்தினார். இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு முதலில் 25 விழுக்காடு வரியை அதிகப்படுத்தினார். பின்னர், கூடுதலாக 25 விழுக்காடு வரியை அதிகரித்துள்ளார். இதன் காரணமாக அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கு 50 விழுக்காடு வரி இனி செலுத்த வேண்டும்.

அடுத்ததாக இந்தியாவைப் பற்றி மோசமான பிம்பத்தை உருவாக்கினார் டிரம்ப். “அமெரிக்கா மீது வரிகளையும் பிற தடைகளையும் விதித்துள்ள ‘மோசமான நாடுகளில்’ ஒன்று” என்று இந்தியாவைப் பட்டியலிட்டார் டிரம்ப்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறினார்கள் என்று சொல்லி பலரையும் கைது செய்து இந்தியாவுக்கு நாடு கடத்தினார்கள். அதில் கொடுமையானது, அவர்கள் கைவிலங்கு போட்டு அனுப்பப்பட்டதாக காட்சிகள் வெளியானது.

பின்னர், அமெரிக்காவுக்கு படிக்க வரும் மாணவர்களுக்கு விசா வழங்குவதை நிறுத்தி வைக்கச் சொன்னார் டிரம்ப். அதன்படி மாணவர் விசா வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விசா கட்டுப்பாடுகளைக் கடுமையாக்கும்படி அந்த நாட்டு வெளியுறவுத் துறை உத்தரவு போட்டுள்ளது.

**இந்தியா - பாகிஸ்தான் மோதலின் போது டிரம்ப் சொன்ன வாக்கு மூலங்கள் இந்தியாவின் மதிப்பைக் குறைப்பதாகவும், ‘எனது பேச்சைக் கேட்டுத் தலையாட்டும் நாடு இந்தியா’ என்பதைச் சொல்வதாகவும் அமைந்திருந்தன. ‘நான் சொன்னதால்தான் போர் நிறுத்தப்பட்டது’ என்று 26 முறை சொல்லி இருக்கிறார் டிரம்ப்.**

**இந்த வரிசையில் உச்சகட்டமாக, ஹெச் 1 பி விசா கட்டணம் 88 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அமெரிக்காவில் வெளிநாட்டவரை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்கள் 88 லட்சம் செலுத்த வேண்டும். இதனால் அமெரிக்காவில் பணிபுரியும் இந்தியர்கள் பெரும் பாதிப்பை அடைவார்கள். வெளிநாட்டவரை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்கள் 1.75 லட்சம் முதல் 4.50 லட்சம் வரை கட்டணமாக இதுவரை செலுத்தி வருகிறது. இதைத்தான் 88 லட்சமாக ஆக்கிவிட்டார் டிரம்ப்.**

**‘அமெரிக்க வேலை வாய்ப்புகளை வெளிநாட்டவர் திருடுகிறார்கள்’ என்பதால் இந்த நடவடிக்கை என்று சொல்லப்படுகிறது. அமெரிக்கத் தொழிலாளர்களது நன்மைக்காக வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான விசா கட்டணத்தை அதிகரித்ததாக பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் இந்தக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டதை ஒரே ஒருமுறை செலுத்தினால் போதும் என்று விளக்கம் அளித்துள்ளார்கள்.**

**அமெரிக்காவில் வழங்கப்படும் ஹெச் 1 பி விசாக்களில் ஐந்தில் ஒரு பங்கை இந்தியர்களே பெற்று வந்தார்கள். அதிலும் குறிப்பாக கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் இப்படி வழங்கப்படும் விசாக்களில் 70 விழுக்காடு விசாக்களை இந்தியர்களே பெற்று வருவதாகவும் சொல்லப்படுகிறது. டிரம்பின் அறிவிப்புக்குப் பிறகு, ஹெச் 1பி விசா வைத்திருக்கும் அனைவரையும் உடனடியாக நாடு திரும்ப அறிவித்துள்ளார்கள். விடுமுறைக்காக சொந்த நாடுகளுக்குச் சென்றிருந்தால் அவர்கள் உடனடியாக அமெரிக்கா சென்றாக வேண்டும்.**

அமேசான், டாடா கன்சல்டன்சி, மைக்ரோசாப்ட், மெட்டா, ஆப்பிள், கூகுள், டெலாய்ட், இன்போசிஸ், விப்ரோ, மகேந்திரா ஆகிய முக்கியமான, பெரிய நிறுவனங்கள் அனைத்திலும் ஹெச் 1 பி விசா வாங்கிய தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகம். தொழிலாளர்களுக்கும், நிறுவனங்களுக்கும் சிக்கலை ஏற்படுத்தி இருக்கிறது டிரம்ப் அறிவிப்பு.

‘இந்த அறிவிப்பு இந்திய தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களை வெகுவாக பாதிக்கும்’ என்று தேசிய மென்பொருள், சேவை நிறுவனங்களின் கூட்டமைப்பான ‘நாஸ்காம்’ அறிவித்துள்ளது.

மேலே குறிப்பிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் இருந்து ஆக்‌ஷனும் இல்லை, ரியாக்‌ஷனும் இல்லை. ‘இதைப் பற்றி ஆய்வு செய்வோம்’ என்று இந்திய வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் சொல்லி இருக்கிறார். ‘இருநாட்டு மக்கள் தொடர்பு முக்கியமானது. இதனை கொள்கை வகுப்பாளர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்’ என்று அருள் பாலித்திருக்கிறார் அவர். இதெல்லாம் அதிபர் டிரம்புக்குப் புரியுமா? புரியாது. இவ்வளவு தான் மோடி ஆட்சியால் முடியும்.

இந்தியர்களின் நலனைக் காக்கும் வெளியுறவுக் கொள்கையில் மோடி அரசு தோல்வி அடைந்துவிட்டதையே இது காட்டுகிறது. இந்திய, இந்தியர் நலன்களுக்கு அக்கறையில்லாத பிரதமர் மோடியின் வெளிநாட்டுப் பயணங்களால் என்ன பயன்?

**மன்மோகன் சிங்கை, ‘பலவீனமான பிரதமர்’ என்று எப்போதும் கிண்டல் அடிப்பார் மோடி. ‘பலமான பிரதமர்’ என்று சொல்லிக் கொண்டவர் அல்ல மன்மோகன். ஆனால், ‘உலகத்தை ஆளும் விஸ்வகுரு’வாக உருவகப் படுத்தப்படும் மோடியின் பிம்பம் உள்நாட்டைப் போலவே வெளிநாட்டிலும் பலவீனமானதுதான் என்பதையே அமெரிக்க அறிவிப்புகள் சொல்கின்றன.**

●●




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.09,2025) தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினர் நல திட்டங்களை மாவட்ட அளவில் ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்த அமைக்கப்பட்டுள்ள சிறப்புக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் மற்றும் தமிழ்நாடு வக்பு வாரியத்தின் உறுப்பினர் அ.சுபேர்கான் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் உள்ளார்.

## இதுபோல் ஒரு முதல்வரை நாடு காண்பது அரிது!

# தமிழ்நாட்டைக் காக்க முதல்வருக்கு உறுதுணையாக இருப்போம்!

## திருவாரூரில் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

**திருவாரூர், செப்.24 -**

**திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற ஓரணியில் தமிழ்நாடு, ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’ உறுதி ஏற்பு பொதுக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.**

இதில் அமைச்சர் கே.என்.நேரு தமது உரையில் குறிப்பிட்டதாவது:–

இந்தியாவின் முன்னணி பத்திரிகைகள் எல்லாம் பாராட்டுகின்ற சிறப்பான ஆட்சியை தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்கள் தந்துகொண்டு இருக்கிறார். அ.தி.மு.க. ஆட்சி முடிந்து தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான ஆட்சி அமைந்தபோது, தமிழ்நாட்டில் முந்தைய அதிமுக அரசின் நிர்வாகத் திறனின்மையால் நிதிப்பற்றாக்குறை, கொரோனா போன்ற பல பிரச்சினைகள் இருந்தன. இருப்பினும் அதை தனது நிர்வாகத் திறத்தால் சமாளித்து நிறைவான மக்கள் நலத் திட்டங்களை முதலமைச்சர் தந்துகொண்டிருக்கிறார். ஒருபக்கம் ஒன்றிய அரசு தி.மு.க.வை அழிப்பதற்கு என்னென்னவோ முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நிதி நெருக்கடியை உண்டாக்குகிறது. தி.மு.க.தான் இனி தொடர்ந்து வெல்லும் என்பதால், அதை முறியடிக்க பீகாரில் செய்ததைப்போல வாக்குத் திருட்டுகளை செய்ய தமிழ்நாட்டிலும் முயற்சிகளை மேற்கொள்ளுகிறார்கள்.

ஆனால் அவர்களின் எந்த முயற்சியும் எங்கள் முதல்வரிடத்தில் செல்லாது. நாம் ஒன்றிய அரசுக்கு தருவது 9.2 சதவீத வரிப் பங்கு. ஆனால் அவர்கள் நமக்கு திரும்ப தருவது 4.7 சதவீதம்தான். அதேபோல கல்விக்கு நிதி தருவதில்லை, குடிநீர் ( ஜல் ஜீவன்) திட்டத்திற்கும் நிதி தருவதில்லை. தமிழ்நாட்டில் மட்டுமே பத்து பல்கலைக் கழகங்கள் இருக்கிறது. அதனால் புதிய கல்விக் கொள்கை என்கிற திட்டத்தின் மூலம் கல்வியையும் சிதைக்க ஒன்றிய அரசு முயல்கிறது. அதேபோல மருத்துவத்துறையிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது.

### நிதி நெருக்கடி!

தலைவர் கலைஞர் அவர்களோடும் நான் அமைச்சராக இருந்திருக்கிறேன். தளபதி அவர்கள் இந்த நிதி நெருக்கடியிலும் அற்புதமாக ஆட்சியை நடத்தி அருமையான திட்டங்களை தந்துகொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட முதல்வரை பார்த்து என்ன செய்திருக்கிறார் முதல்வர்? என்று கேள்வி கேட்கிறார்கள்.

தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள் யாவும் தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்டவை. எல்லோருக்கும் எல்லாம் என நம் முதல்வர் தளபதி அவர்கள் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்.

தொகுதி மறு சீரமைப்பு என்கிற பெயரில் நம்முடைய 39 நாடாளுமன்ற தொகுதிகளை குறைக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு ஒன்றிய அரசு செயல்பட்டபோது, அதை முதலில் எதிர்த்து போர்க்குரல் எழுப்பியவர் தளபதி அவர்கள். அதனால் ஒன்றிய அரசு மற்ற மாநிலங்களில் நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையை கூட்ட முயல்கிறது. அதனையும் நமது திராவிட நாயகர் முதல்வர் எதிர்த்து வருகிறார்.

சட்டமன்ற தேர்தல்களிலும் தமக்கு எதிராக வாக்களிப்பவர்களின் வாக்குக்களை பறிக்க ஒன்றிய பி.ஜே.பி. அரசு நடவடிக்கைகளை எடுக்கிறது. அதையும் நமது முதல்வர் தடுக்க போராடி வருகிறார். அதேபோல கல்வியிலும் ஒன்றிய அரசின் தடைகளைத் தாண்டி தமிழ்நாட்டை முன்னேற்றி வருகிறார். அதனால்தான் இந்தியாவில் உள்ள கல்வி நிறுவனங்களில் தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களே முதலிடத்தில் உள்ளன.

ஊர் ஊராக பேருந்தில் செல்லும் எடப்பாடி பழனிசாமி இந்த அரசு என்ன செய்தது? என்கிறார். அதிமுக அரசு பத்து ஆண்டுகளில் செய்திடாதவைகளை தளபதி அவர்கள் நான்கே ஆண்டுகளில் செய்து முடித்து இருக்கிறார்.

தமிழ்நாட்டை பொறுத்தவரை தி.மு.க. – அ.தி.மு.க. இவைகளுக்கு இடையேதான் போட்டி. நேற்று திருவாரூரில் நடந்த அவர்கள் கூட்டத்தை பலமடங்கு மிஞ்சும் அளவுக்கு பூண்டி. கே. கலைவாணன் இன்று கூட்டத்தை திரட்டிக்காட்டி இருக்கிறார்.

நான் தலைவர் கலைஞர் அவர்களோடு தேர்தல் பணி ஆற்றி இருக்கிறேன். பூண்டி கலைவாணன் இரண்டு முறை இங்கே மாபெரும் வெற்றியை பெற்றவர். அதனால் இங்கே தேர்தல் பணியை சம்பிரதாயமாக துவக்கி இருக்கிறோம்.

எங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் 41 தொகுதிகளிலும் நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம். இதுபோன்ற ஒரு முதலமைச்சரை நாம் பெற்றிருப்பது நமது பாக்கியம். தளபதி அவர்களைப்போல ஒரு முதல்வரை இனி நாடு காண்பது என்பது அரிது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு தளபதிதான் சரியான முதல்வர். நான்கு வருடங்கள் வீட்டில் இருந்துவிட்டு இன்று மக்களை சந்திக்க வருவதாக எடப்பாடி சொல்லி சுற்றி வருகிறார்.

### கழகத்தின் வலிமையான கோட்டை!

அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி என்பது பொருந்தாத கூட்டணி. அ.தி.மு.க. தொண்டர்கள் பா.ஜ.க.வை ஏற்றுக்கொள்ளவில்லை. பா.ஜ.க. – அ.தி.மு.க.வை கபளீகரம் செய்துவிடும். அதை அ.தி.மு.க. தொண்டர்கள் அறிந்தே வைத்து இருக்கிறார்கள்.

மக்களுக்காக உழைக்கும் நமது முதல்வரை தொடர செய்வதுதான் நமது கடமை. இந்த டெல்டா பகுதி என்பது கழகத்தினுடைய கோட்டை. அதிலும் திருவாரூர், மன்னார்குடி போன்றவை கழகத்தின் மிக வலிமையான கோட்டைகள். கலைஞர் அவர்கள் என்ன சொன்னாலும் அதை செய்து முடித்தவர் பூண்டி.கலைவாணன் அவர்கள்.

இன்று இப்படி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டத்தை நடத்தி இருக்கிறார். அப்படிப்பட்ட மாவட்ட செயலாளரை நான் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன். நமது தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தமிழ்நாட்டிற்கு மிகப்பெரிய தொழில் முதலீட்டை பெற்றுத்தந்து முதல்வரின் நம்பிக்கையை பெற்று விளங்குகிறார். நேற்று கூட ஒரே நாளில் 30,000 கோடிகள் முதலீட்டைப் பெற்றுத்தந்துவிட்டுத்தான் இங்கே வந்து அமர்ந்து இருக்கிறார்.






இந்தியாவில் அதிக அளவு தொழிற்சாலைகள் உள்ளன. தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் பெண்களுக்கு வேலை வாய்ப்பை பெறுவதும் தமிழ்நாட்டில்தான்.

தமிழ்நாட்டின் முதல்வர் தளபதி அவர்களை மீண்டும் முதல்வராக்கி இந்தியாவையே வளர்ச்சிப் பாதைக்கு நாம் கொண்டு செல்ல வேண்டும். திருவாரூர் மாவட்டத்தில் உள்ள திருவாரூர், கூத்தாநல்லூர், திருத்துறைப்பூண்டி உள்ளிட்ட நகராட்சிகளுக்கு நான்காண்டு காலங்களில் 632 கோடிகளில் திட்டப்பணிகளும், ஏழு பேரூராட்சிகளுக்கு 103 கோடிகளில் திட்டப்பணிகளும் தமிழ்நாடு முதல்வர் அவர்களால் தரப்பட்டிருக்கிறது.

அதேபோல் குடிநீர் திட்டப்பணிகளுக்காக 1,127 கோடிகளும் திருவாரூர் மாவட்டத்திற்கு மட்டும் தமிழ்நாடு முதல்வர் அவர்களால் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு என்பது முழுவதும் நமது மாவட்டங்கள் என்றாலும் திருவாரூர் என்பது நமது உறவு மாவட்டம். அதனை விட்டுவிடக் கூடாது என்று எங்களிடம் சொல்லி திட்டங்களை தந்து வருகிறார்.

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களும், மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களும் இந்த மாவட்டத்திற்கு என எதை கேட்டாலும் முதலமைச்சர் தந்துகொண்டிருக்கிறார்.

தலைமை கழகம் எங்களை நாகரீகமாக விமர்சியுங்கள் என்று கட்டளை இட்டு இருப்பதால் தரம் தாழ்ந்து விமர்சிப்பவர்களுக்கு பதில் தர முடியவில்லை. தமிழ்நாட்டை காப்பதற்கு தலைவர் தளபதி அவர்களுக்கு உறுதுணையாக இருப்பதுதான் நமது கடமை.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் உரை நிகழ்த்தினார்.

இந்தக் கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை ஏற்க, நகரச் செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ் வரவேற்புரையாற்றினார்.

தொகுதி பார்வையாளர்கள் எஸ்.கே. வேதரத்தினம், ஜெகவீரபாண்டியன், சௌமியன் வைத்யநாதன், ராஜா சீனிவாசன் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், முன்னாள் அமைச்சர் கழக விவசாயத் தொழிலாளர் அணி மாநிலச் செயலாளர் உ.மதிவாணன், தாட்கோ தலைவர் நா.இளையராஜா, மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, அவைத்தலைவர் க.தன்ராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், மு.வெங்கடேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன், ஆர்.எஸ்.பாண்டியன், டி.செல்வம், கணபதி, ஆடலரசன்,

ஒன்றியச் செயலாளர்கள் வீ.அன்பரசன், கோ.தெட்சிணாமூர்த்தி, வே.மனோகரன், சிவா என்கிற சிவசுப்பிரமணியம், வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், சேகர் கலியபெருமாள், பா.பிரபாகரன், நா.கவியரசு, எஸ்.ஜோதிராமன், புலிவலம் ஏ.தேவா, ப.பிரகாஷ், ஆனந்த் என்கிற அடைக்கலம், பால.ஞானவேல், ஐ.வி.குமரேசன், கேப்டன் செலவராஜ், ஆர்.பாலச்சந்திரன், இரா.மனகரன், டி.எஸ்.டி.முத்துவேல், நகரச் செயலாளர்கள் வீரா.கணேசன், எஸ்.வி.பக்கிரிசாமி, பேரூர்ச் செயலாளர்கள் பா.சிவநேசன், பக்கிரிசாமி, தியாகு, ஏ.கே.டி.சேரன், பூண்டி. கே.கலைவேந்தன்.

பொதுக்குழு உறுப்பினர்கள் டி.செந்தில், செல்வா ஜெயதேவன், கலைவாணி மோகன் மற்றும் பணங்குடி குமார், பா.அரவிந்த், ஆர்.வி.ஆனந்த், பைங்காநாடு இளையராஜா உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், பல்லாயிரக்கணக்கான கழக தோழர்கள் பங்கேற்றனர்.